**செய்தி வெளியீடு எண்: 0 60** **நாள்: 24.01.2019**

**செய்தி வெளியீடு**

**25–1–2019– தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்கள்**

ஜனநாயக தேர்தல் முறைகளில் குடிமக்கள் தங்கள் பங்களிப்பை அதிகப்படுத்தும் ஒரு முயற்சியாக இந்தியத் தேர்தல் ஆணையம் தனது நிறுவன நாளான ஜனவரி 25–ம் தேதியை தேசிய வாக்காளர் தினமாக ஒவ்வொரு வருடமும் 2011–ஆம் ஆண்டிலிருந்து கொண்டாட வேண்டும் என்று அறிவித்துள்ளது. இந்த ஆண்டு ஜனவரி 25–ஆம் நாளை ஒன்பதாவது தேசிய வாக்காளர் தினமாக மாநிலமெங்கும் நாம் கொண்டாடுகின்றோம். இந்த ஆண்டின் மையநோக்கு 'எந்தவொரு வாக்காளரும் விடுபட்டுவிடக் கூடாது' என்பதாகும்.

தேசிய வாக்காளர் தினக் கொண்டாட்டங்களுக்கு மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் மற்றும் 67664 வாக்குச்சாவடிகள் அமைந்துள்ள அனைத்து 29988 வாக்குச்சாவடி அமைவிடங்களிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. மாநில அளவிலான விழா தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அவர்களின் தலைமையில் 25.1.2019 அன்று காலை 11.00 மணியளவில் பெருநகர சென்னை மாநகராட்சி அம்மா மாளிகையில் நடைபெறும். அவ்விழாவில், தலைமைத் தேர்தல் அதிகாரி அவர்கள் தேசிய வாக்காளர் தின உறுதிமொழியினை ஏற்கவைத்து, சிறப்புரையாற்றுவார். மேலும், அக்டோபர் மாதம் மாநில அளவில் நடைபெற்ற தேர்தல் விழிப்புணர்வுப் போட்டி–2018–ல் (SVEEP Contest-2018) வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசினை வழங்குவார். மாவட்ட தேர்தல் அதிகாரி மற்றும் ஆணையர், பெருநகர சென்னை மாநகராட்சி மற்றும் துணை ஆணையர் (வருவாய் (ம) நிதி),பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களும் கலந்து கொள்வர்.

வலுவான ஜனநாயகத்திற்கு பெருமளவில் பங்கேற்றலின் முக்கியத்துவத்தையும் அதில் இளைஞர்களின் பங்கையும், 'எந்தவொரு வாக்காளரும் விடுபட்டுவிடக் கூடாது' என்னும் இவ்வாண்டின் தேசிய வாக்காளர் தின மையக்கருத்தை உணர்த்தும் வகையில் இவ்விழாவில் பள்ளிச் சிறார்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெறும்.

இதே போல் மாவட்ட அளவிலான விழாக்களிலும் வாக்குச் சாவடி நிலையிலான விழாக்களிலும் தேசிய வாக்காளர் தினத்திற்கான உறுதிமொழியினை வாக்காளர்கள் ஏற்பர். மேலும், ஜனவரி 25, 2019 அன்று 11.00 மணியளவில் அரசு அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் கல்லூரிகளில் வாக்காளர் உறுதிமொழி ஏற்கப்படும். இதேபோல் 26.01.2019 அன்று நடைபெறவிருக்கும் கிராம சபைக்கூட்டங்களில் வாக்காளர் உறுதிமொழி ஏற்கப்படும். சென்னையில் நடைபெறவுள்ள இந்த ஆண்டு குடியரசு தின விழாவையொட்டி நடைபெறும் பேரணியில் 'எந்தவொரு வாக்காளரும் விடுபட்டுவிடக் கூடாது' என்னும் மையநோக்கின் அடிப்படை குறித்த ஓர் அலங்கார ஊர்தியும் இடம் பெறும்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**